என்னவென்று சொன்னால் அங்கே எந்தவிதமான Professional Course கல்லூரிகளும் இதுவரைக்கும், அரசுத் தரப்பிலே இல்லை. அந்த மாவட்டத்திலே மருத்துவக் கல்லூரி வேண்டும் என்று பல காலம் வேண்டுகோள் வைக்கப்பட்டது. இப்போது அதற்கான அனுமதியைத் தந்த தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் அதற்குப் பெரும் முயற்சிகளை மேற்கொண்ட நம்முடைய சுகாதாரத் துறை அமைச்சரையும் நான் இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மாவட்டத்திலே ஒரு சட்டக் கல்லூரியை நிறுவ வேண்டுமென்ற கோரிக்கை தொடர்ச்சியாக வெகு காலமாக இருந்து வருகிறது. 80 கிலோ மீட்டர் தூரம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் நெல்லைக்கும், குமரி மாவட்டத்திற்கும். நெல்லை மாவட்டத்தில் இல்லாத Professional Course கல்லூரிகளே கிடையாது. எல்லா Professional Course கல்லூரிகளும் நெல்லை மாவட்டத்தில் அரசுத் தரப்பிலே இருக்கின்றன. வாழ்த்துக்கள். அதுபோல் கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் தனி கவனமும் சிறப்புப் பார்வையும் ஏற்படுத்தி கன்னியாகுமரி மாவட்டத்திலே ஒரு சட்டக் கல்லூரியை மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் அம்மாவிடம் கேட்டு அடுத்த ஆண்டாவது தொடங்கித் தருவதற்குப் பெருந்தன்மையோடு முன்வருவார்களா என்பதை உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத்திற்கு ஒரு Professional Course கல்லூரி ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. நிதி நிலைமை சீரடைந்த பிறகு உறுப்பினருடைய கருத்துக்கள் பற்றி யோசிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 4, திரு. இரா. திருமாவளவன், மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்.

கட்டட வசதி

4—

***18807—திரு. இரா. திருமாவளவன்:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2003 ஜனவரி 28

கடலூர் மாவட்டம், மங்களூர் தொகுதி, திட்டக்குடியிலுள்ள நடுவர் நீதிமன்றத்திற்கு நிரந்தரக் கட்டடம் நடப்பு நிதியாண்டில் கட்டப்படுமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இப்பொருள் குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. இரா. திருமாவளவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மங்களூர் தொகுதி, திட்டக்குடியில் 1988-லிருந்து குற்றவியல் வழக்கு மன்றமும், 1996-லிருந்து உரிமையியல் வழக்கு மன்றமும் இயங்கி வருகின்றன. வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகிற அந்த வழக்கு மன்றத்தில் 25-க்கும் மேற்பட்ட அமைச்சுப் பணியாளர்களும், 25-க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்களும் ஒரே அறையிலேயே இருந்து பணியாற்ற வேண்டியிருக்கிறது; தங்களுடைய கடமைகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. அங்கே வருகின்ற பொதுமக்கள், வழக்கறிஞர்கள், அமைச்சுப் பணியாளர்கள் ஆகிய நூற்றுக்கணக்கானவர்களுக்கு ஒரே ஒரு கழிப்பறை மட்டும்தான் உள்ளது. இந்த நிலையில் அங்கே தனி குற்றவியல் வழக்கு மன்றமும், தனி உரிமையியல் வழக்கு மன்றமும் வேண்டுமென்று கோரி கடந்த 10 ஆண்டுகளாக மக்கள் போராடி வருகிறார்கள்; வழக்கறிஞர்கள் போராடி வருகிறார்கள். பல்வேறு அமைப்புக்கள் போராடி வருகின்றன. மேலும் அங்கே வழக்கறிஞர்களுக்கு என்று தனி அறையோ, அரசு வழக்கறிஞர்களுக்கு என்று தனி அறையோ ஒதுக்கப்படவில்லை; இடம் இல்லை. ஆகவே இந்த நிலையில் உயர் நீதிமன்றம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே அங்கே தனி வழக்கு மன்றத்தைக் கட்ட வேண்டுமென்று பரிந்துரை செய்திருக்கிறது. அதற்காக வழக்கறிஞர்கள் தங்களுடைய சொந்தச் செலவிலே, சங்கத்தின் சார்பிலே 50 சென்ட் நிலத்தை வாங்கி வைத்திருக்கிறார்கள். அரசு மேலும் 50 சென்ட் நிலம் வழங்க இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே உடனடியாக அங்கே உயர்நீதிமன்றத்தினுடைய பரிந்துரையின் அடிப்படையில் தனியே குற்றவியல் வழக்கு, மன்றமும், உரிமையியல் வழக்கு மன்றமும், திட்டக்குடி அருகேயுள்ள இளமங்கலம் என்ற இடத்திலே கட்டுவதற்கு இந்த நடப்பு நிதியாண்டிலே அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

2003 ஜனவரி 28]

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல கடந்த காலங்களில் இருக்கின்ற சிரமங்கள் முழுமையாக அகற்றப்பட வேண்டுமென்கிற முனைப்போடு தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒருங்கிணைந்த ஒரு புரபோசல், கருத்துருவை உயர்நீதிமன்றத்திடமிருந்து பெற்று மத்திய அரசுக்கு—140 கோடி ரூபாயில் ஒரு கருத்துருவை அனுப்பியிருக்கிறார்கள். அந்தக் கருத்துருவின் அடிப்படையில் இரண்டு நினைவூட்டுக் கடிதங்கள்கூட மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டும் 50 சதவிகித நிதியுதவிகூட இதுவரையில் அவர்கள் தரவில்லை. எனவே இந்தச் சூழ்நிலையில் தனித்தனியாக கட்டடம் கட்டுவதைவிட phased manner-ல் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அனைத்து நீதிமன்றக் கட்டடங்களும் முழுமையான அளவுக்கு வசதிகளைப் பெறவேண்டும் என்கிற முனைப்போடு மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. திட்டக்குடியைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 50 சென்ட் நிலத்தை அவர்கள் வைத்திருப்பதாகச் சொன்னார்கள். இது அரசின் கவனத்திற்கு வரவில்லை. சென்னை உயர் நீதிமன்றத்தின் கருத்தின் அடிப்படையில்தான் நாம் செயல்பட முடியும். உயர் நீதிமன்றத்தினுடைய பதிவாளர் அவர்கள் நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே மீதி 50 சதவிகித நிலம் அந்த நிலமாகத்தான் நிச்சயமாக இருக்கும் என்று கருதுகிறேன். அப்படி இருக்கின்ற பட்சத்தில் நம்முடைய வழக்கறிஞர்கள் கையகப்படுத்திய 50 சென்ட் நிலம் மற்றும் அரசுக்கு இன்னும், கட்டடம் கட்டுவதற்கு எவ்வளவு நிலம் தேவைப்படுகிறதோ, அந்த இடத்தையும் பெற்று அந்த இடத்திலே நம்முடைய தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அவர்களைக் கொண்டு உரிய நிதி பெற்று கட்டடம் கட்டித் தருவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

திரு. இரா. திருமாவளவன்: நடப்பு நிதியாண்டிலேயே இதைக் கட்டித் தருவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல, உயர்

நீதிமன்றப் பதிவாளர் அவர்களுடைய கருத்தைப் பெற்றுத்தான் நடவடிக்கை எடுக்கப்படும். அந்த 140 கோடி ரூபாயிலே, இந்தக் கருத்துரு இல்லை. தற்போது மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளை ஏற்று உயர் நீதிமன்றப் பதிவாளருடைய கருத்துக்களைப் பெற்று மத்திய அரசினுடைய நிதி உதவி கோரி அனுப்பப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 5, திரு. எஸ். தாமோதரன். மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

5—

கோயில் கும்பாபிஷேகம்

***20793—திரு. எஸ். தாமோதரன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருதுநகர் ஒன்றியம், கோல்வார்பட்டி பஞ்சாயத்திலுள்ள அருள்மிகு மீனாட்சி அம்மன் கோயிலைப் புதுப்பித்து கும்பாபிஷேகம் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விருதுநகர் மாவட்டம், விருதுநகர் ஒன்றியம், கோல்வார்பட்டி பஞ்சாயத்தில் உள்ள மீனாட்சி அம்மன் கோயிலைப் புதுப்பித்து கும்பாபிஷேகம் செய்ய அரசால் இந்த ஆண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதற்கண் எங்களது காங்கிரஸ் கட்சியின் சார்பிலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்னுடைய புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். நடப்பு ஆண்டிலே நல்ல மழை பெய்து நாடு சுபிட்சமாக வர அன்னை மீனாட்சிஅம்மனை வேண்டிக்கொண்டு இந்தக் கேள்வியை நான்

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS